www.StartupAndBusinessNews.com



# இளைஞர்கள் ஏன் தொழில் முனைவோராக வேண்டும்?



கட்டுரையாளர்
**ராஜன்** (Raj Exim),
மதுரை

**ஒரு நாட்டின் வளர்ச்சியின் பின்னணியில் பல காரணங்கள் இருந்தாலும், முதன்மைக் காரணம், அதில் தவிர்க்க முடியாத சக்தியாக முன்நிற்பது அந்நாட்டின் இளைஞர்கள் தான்.**

ஒரு தனி நபர் தொழிலாளராக மாறும்போது, அந்த நபரை சார்ந்திருக்கும் அவரது குடும்பம் மட்டுமே பயன்பெற முடியும். ஆனால் அந்த நபர் தொழில் முனைவோராக மாறினால், பலருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும். அதனால் பல குடும்பங்களின் பொருளாதாரம் உயரும். நாடும் உயரும். எனவேதான் இளைஞர்கள் தொழில் முனைவோராக மாற முன் வரவேண்டும்.

ஒரு தொழில் முனைவோர் என்பவர் ஒரு விதத்தில் கண்டுபிடிப்பாளர் எனக் கூறலாம். எந்த தொழிலை செய்யலாம் என தொழில்



கண்டுபிடிப்பதில் தொடங்கி, தொழில் செய்யுமிடத்திலும், சந்தையில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்துவதிலும் பல யுக்திகளை கையாண்டு அதன் மூலம் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கிறார் அல்லது புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை உருவாக்குகிறார்.

தொழில் முனைவோர்கள் மிகுந்த தன்னம்பிக்கை உள்ளவராகவும், தொழில் சார்ந்த சவால்கள் மற்றும் நிதிச் சவால்களை எதிர்க்கொண்டு, புது வாய்ப்புகளை உருவாக்குவதில் ஆர்வம் உள்ளவராக இருக்க வேண்டும்.

ஒரு தொழில் முனைவோருக்கு தேவையானவை :

## தன்னம்பிக்கை

தன் மீதும், தனது திறமை மீதும் பூரண நம்பிக்கை வைத்தல், ஒரு காரியத்தையோ, சவாலையோ வெற்றிகரமாக முடிக்க தன்னால் முடியும் என்ற உறுதியான நம்பிக்கை வைத்தல், எதிர்ப்பு இருந்தாலும் தனது முடிவில் உறுதியாக இருத்தல், மற்றவர்கள் செய்யத் தயங்கும் ரிஸ்க்கான தொழிலை துணிவாக ஏற்று செய்தல்.

## புதிய சிந்தனை

காரியத்தை முடிக்க தேவைப்படும் அளவை விட கூடுதல் முயற்சி எடுக்கும் குணம், மற்றவரை விட முன்பாக ஒரு செயல்பாட்டில் இறங்கி அதில் வெற்றி காணும் துணிவு மிக்கவராக இருத்தல் வேண்டும், தொழிலை புதிய இடங்களில் புதிய பொருள்களைக் கொண்டு புதிய சேவை மூலமாக விரிவாக்க முயற்சித்தல்.

## வாய்ப்புகளை உருவாக்குதல்

சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஏற்ற வாய்ப்புகளை கண்டறிந்து அதை நடைமுறைக்கு கொண்டுவந்து செயல்பாட்டில் இறங்கி வெற்றி காணும் உருவாக்கும் சிந்தனை கொண்டவராக இருக்க வேண்டும்.

## விடா முயற்சி

"வானமே எல்லை" என்ற எண்ணம் கொண்டவராகவும், "Never Give Up" என்ற விடா முயற்சி, எத்தகைய தடைகள், சோதனைகள் வந்தாலும் விட்டுக் கொடுக்காமல் புது சிந்தனைகளை புகுத்தி வெற்றி காணும்

காரியத்தை முடிக்க தேவைப்படும் அளவை விட கூடுதல் முயற்சி எடுக்கும் குணம், மற்றவரை விட முன்பாக ஒரு செயல்பாட்டில் இறங்கி அதில் வெற்றி காணும் துணிவு மிக்கவராக இருத்தல் வேண்டும். தொழிலை புதிய இடங்களில் புதிய பொருள்களைக் கொண்டு புதிய சேவை மூலமாக விரிவாக்க முயற்சித்தல்.

## வாய்ப்புகளை உருவாக்குதல்

சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஏற்ற வாய்ப்புகளை கண்டறிந்து அதை நடைமுறைக்கு கொண்டுவந்து செயல்பாட்டில் இறங்கி வெற்றி காணும் உருவாக்கும் சிந்தனை கொண்டவராக இருக்க வேண்டும்.

## விடா முயற்சி

''வானமே எல்லை'' என்ற எண்ணம் கொண்டவராகவும், "Never Give Up" என்ற விடா முயற்சி, எத்தகைய தடைகள், சோதனைகள் வந்தாலும் விட்டுக் கொடுக்காமல் புது சிந்தனைகளை புகுத்தி வெற்றி காணும்



www.StartupAndBusinessNews.com

சுபாவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

## ஊழியர் நலனில் அக்கறை

தொழிலாளிகளுக்கு அவரது திறமைக்கு ஏற்ற ஊதியம் கொடுத்தல், இன்சூரன்ஸ் போன்றவற்றை செய்து கொடுத்து அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்குதல். மற்றும் தொழிலாளிகளின் நலத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

## முறையான திட்டமிடல்

இலக்கை அடைய திறமையாக திட்டமிடல். பெரிய செயலை சிறிய சிறிய செயல்களாக மாற்றி எளிதில் முடிக்கும் திறமை. தடைகளை முன்னறிந்து திட்டமிடல், சீரான மற்றும் முறையான செயல் ஆற்றல்.

புதிதாக ஸ்டார்ட் அப் (Start-up) தொழில் தொடங்கும் போது திட்டமிடுதலில் ஏற்படும் தவறுகள், இலக்கை எட்டுவதில் தடைகள் போன்றவை எதனால் ஏற்படுகிறது என்பதை அடுத்த தொடரில் பார்க்கலாம்.

(தொடரும்)

